Dinamalar 31-08-2012

# ‘பேஸ்புக்’கில் பதில் சொல்கிறது ‘மெட்ரோ’ ரயில்

சென்னை, ஆக. 31-

பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதற்கு, சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம், ‘பேஸ்புக்’கில் இணைந்து, பொதுமக்களின் கேள்விகளுக்கு பதில் கூறி வருகிறது.

‘பேஸ்புக், டிவிட்டர், ஆர்குட்’ போன்ற சமூக வலைதளங்கள், தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் பெரிய அளவில் பயன்பட்டு வருகின்றன. தற்போதுள்ள நிலையில், இந்தியாவில், பெரும் தலைவர்களும் சமூக இணையதளங்களில் இணைந்துள்ளனர். சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகமும், ‘பேஸ்புக்’கில் இணைந்துள்ளது.

மெட்ரோ ரயில் நிலையம் அமைக்கும் பணிகள் குறித்து, பொதுமக்கள் கேட்கும் கேள்விகளுக்கு, இதில் பதில் அளிக்கின்றனர்.

இதுகுறித்து, மெட்ரோ ரயில் நிலைய அதிகாரிகள் கூறியதாவது:

பொதுமக்கள், மெட்ரோ ரயில் நிலையம் அமைக்கும் பணிகள் குறித்து தெரிந்து கொள்ள, ‘பேஸ்புக்’கில் இணைந்திருக்கிறோம். இதில், ரயில் நிலையம் அமைக்கும் பணிகள் குறித்து, பொதுமக்கள் அறியலாம்.

நிர்வாகத்தின் வெளிப்படை தன்மைக்காக, எங்களின் செயல்பாடுகளை உடனுக்குடன் பதிவேற்றம் செய்கிறோம். மெட்ரோ பணிகள் குறித்து, பொதுமக்கள் கேள்வி எழுப்பினால், அது குறித்த விளக்கம் தருகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.